மெட்ரோ ரயில் நிலையம் மற்றும் ரயிலில்

# கொரோனா தடுப்பு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி

சென்னை, ஜன. 20-

சென்னை மெட்ரோ ரயில்வே நிர்வாகம் வெளியிட்ட அறிக்கை: சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் பொது மக்களுக்கும் மெட்ரோ ரயிலில் பயணிக்கும் பயணிக்களுக்கும் பாது காப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஒரு பகுதியாக மெட்ரோ ரயிலில் பயணம் செய்வது எவ்வளவு பாதுகாப்பானது என்பதை பயணிகளுக்கு தெரிவிக்கும் வகையில் மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ ரயில்களில் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் அகரம் கலைக் குழுவுடன் இணைந்து வரும் 22ம் தேதி (வெள்ளிக்கிழமை) இரவு 7 மணி முதல் 7.50 வரை விமான நிலையம் மெட்ரோ ரயில் நிலையத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதற்கான நாடகம் நடைபெறுகிறது.

இதனை தொடர்ந்து வரும் 25ம் தேதி (திங்கள் கிழமை) காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை வண்ணாரப்பேட்டை மெட்ரோவிலிருந்து விமான நிலையம் மெட்ரோ (ஏஜி-டி.எம்.எஸ் வழியாக) மற்றும் விமான நிலையம் மெட்ரோவிலிருந்து சென்ட்ரல் மெட்ரோ (கோயம்பேடு வழியாக) செல்லும் மெட்ரோ ரயிலில் பொம்மலாட்டம் கலைநிகழ்ச்சி நடைபெறுகிறது.

எனவே மெட்ரோ ரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள், மெட்ரோ ரயில் நிலையங்களில் நடைபெறும் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு குறித்த விழிப்புணர்வுக் கலைநிகழ்ச்சிகளை கண்டு விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

இவ்வாறு மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.